செ.வெ.எண்: 06 நாள்:02.11.2017

**திருநெல்வேலி மாநகராட்சி பேட்டை நரிக்குறவ காலனி, மகிழ்வண்ணநாதபுரம், குன்னத்தூர் ரோடு, ஆகிய பகுதிகளில் கனமழை காரணமாக வெள்ள நீர் வீடுகளில் புகுந்த பகுதிகளையும், ஜஙசன் பேருந்து நிலைய பகுதியில் தேங்கியுள்ள மழை நீரை அகற்றும் பணிகளையும் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.சந்தீப் நந்தூரி,இ.ஆ.ப., அவர்கள் நேரில் சென்று பார்வையிட்டார். பணிகளை விரைந்து மேற்கொள்ள மாநகராட்சி அலுவலர்களுக்கு உத்தரவிட்டார்.**

----

திருநெல்வேலி மாநகராட்சி பகுதியில் கனமழை காரணமாக பல்வேறு பகுதிகளில் மழை நீர் வீடுகளுக்குள் புகுந்தது இப்பகுதிகளை மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.சந்தீப் நந்தூரி,இ.ஆ.ப., அவர்கள் நேரில் பார்வையிட்டார். மேலும் மழைநீரை வெளியேற்றும் பணிகளை விரைந்து மேற்கொள்ளுமாறும் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உணவு வழங்க நடவடிக்கை மேற்கொள்ளுமாறு மாநகராட்சி அலுவலர்களுக்கு உத்தரவிட்டார்.

திருநெல்வேலி மாநகராட்சி பேட்டை நரிக்குறவ காலனி பகுதியில் கனமழையின் போது பல்வேறு வீடுகளுக்குள் மழை வெள்ளம் புகுந்தது இப்பகுதியை பார்வையிட்ட மாவட்ட ஆட்சியர் அவர்கள் நரிக்குறவ மக்களுக்கு ஆறுதல் தெரிவித்தார். இப்பகுதியில் மழையின் போது தண்ணீர் தேங்காமால் விரைந்து செல்ல உடன் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென மாநகராட்சி அலுவலர்களுக்கு உத்தரவிட்டார். தொடர்ந்து குன்னத்தூர் ரோடு, செண்பகம்பிள்ளை மேலத் தெரு பகுதியில் மழை நீர் தெருவில் ஓடி கொண்டிருப்பதையும், மகிழ்வண்ணநாதபுரம், உப்பு தெரு உள்ளிட்ட பகுதிகளில் மழைநீர் கால்வாயிலிருந்து பெருக்கெடுத்து தெருக்களின் வழியாக செல்வதையும் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் ஒவ்வொரு பகுதிக்கும் நேரில் சென்று பார்வையிட்டார். கால்வாய் பகுதியில் மழைநீர் விரைந்து செல்ல உடன் நடவடிக்கை மேற்கொள்ளவும் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உணவு வழங்கவும் மாநகராட்சி அலுவலர்களுக்கு உத்தரவிட்டார். தொடர்ந்து ஜங்சன் பேருந்து நிலையம் பகுதியை மாவட்ட ஆட்சித்தலைவர்அவர்கள் ஆய்வு செய்து அங்கு தேங்கியுள்ள மழை நீரை மாநகராட்சி பணியாளர்கள் மோட்டார்கள் மூலம் வெளியேற்றி வருவதை பார்வையிட்டார். அப்பகுதியில் உள்ள ஓடை பாலத்தினை சீரமைத்து உயர்த்தி கட்ட நடவடிக்கை மேற்கொள்ள மாநகராட்சி அலுவலர்களுக்கு உத்தரவிட்டார்.

மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:-

திருநெல்வேலி மாவட்டத்தில் நேற்று மாலை திருநெல்வேலி, பேட்டை, நாங்குநேரி, ராதாபுரம் உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில் கனமழை பெய்துள்ளது. திருநெல்வேலி மாவட்டத்தில் 13 இட்ங்களில் மழையளவு கணக்கிடப்படுகிறது. நேற்று மொத்தம் 514 மி.மீ. மழை பதிவாகியுள்ளது. சராசரியாக 39 மி.மீ மழை பெய்துள்ளது. திருநெல்வேலி பாளை, பேட்டை பகுதிகளில் அதிக மழை பெய்துள்ளது. இதன் காரணமாக ஒரு சில பகுதிகளில் தண்ணீர் தேங்கியுள்ளது. தேங்கியுள்ள மழைநீரை விரைந்து வெளியேற்றவும் கூடுதல் மழை பெய்தாலும் உடனடியாக மழை நீர் வடியும் வகையில் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. நீர்நிலை பகுதிகளில் உள்ள ஆக்கிரமிப்புகளை அகற்றிட நீதிமன்றம் ஏற்கனவே

உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. நீர்நிலை பகுதிகளில் உள்ள ஆக்கிரமிப்புகள் அகற்ற நடவடிக்கை எடுக்கப்படும். திருநெல்வேலி 125 இடங்கள் வெள்ள பாதிப்பு பகுதிகளாக கண்டறியப்பட்டு அங்கு பேரிடர் மீட்பு குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளது. இன்னும் 3 தினங்களுக்கு கனமழை பெய்யலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது. மழையின் காரணமாக பொதுமக்களுக்கு எவ்வித பாதிப்பும் ஏற்படாத வகையில் உடனுக்குடன் நடவடிக்கை மேற்கொள்ள மாவட்ட நிர்வாகம் தயார் நிலையில் உள்ளது. என தெரிவித்தார்.

இந்த ஆய்வின் போது மாவட்ட வருவாய் அலுவலர் திரு.முத்துராமலிங்கம், உதவி ஆட்சியர் (பயிற்சி) திரு.இளம்பகவத்,இ.ஆ.ப., மாநகராட்சி ஆணையர்(பொ) திரு.நாராயணநாயர், மாவட்ட வழங்கல் அலுவலர் திரு.புண்ணியகோட்டி, மாநகர நல அலுவலர் திரு.பொற்செல்வன், உதவி செயற்பொறியாளர் திரு.செல்வராஜ், திருநெல்வேலி மண்டல உதவி ஆணையர் திருமதி.கீதா, வட்டாட்சியர் திரு.கணேசன், உதவி பொறியாளர் திரு.அருள், சுகாதார அலுவலர் திரு.முருகேசன் மற்றும் அலுவலர்கள் வந்திருந்தனர்.

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம் திருநெல்வேலி.